# நவம்பர் – 13 – செவ்வாய்

**புனித பிரான்சிஸ் சேவியர் கபிரினி**
**ஆண்டவரை நம்பு: நலமானதைச் செய்: திபா. 37:3**

## முதல் வாசகம் : தீத்து 2 : 1 – 8,11 – 14

அன்பிற்குரியவரே! நீயோ நலந்தரும் போதனைக்கேற்பப் பேசு. வயது முதிர்ந்த ஆண்கள் அறிவுத்தெளிவு, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாய் இருந்து நம்பிக்கை, அன்பு, மனவுறுதி ஆகியவற்றை நன்கு காத்துக்கொள்ளச் சொல். அவ்வாறே வயது முதிர்ந்த பெண்களும் தூய நடத்தை உடையவர்களாய், புறங்கூறாதவர்களாய், குடிவெறிக்கு அடிமை ஆகாதவர்களாய், நற்போதனை அளிப்பவர்களாய் இருக்குமாறு கூறு. இவ்வாறு கற்றுக்கொடுப்பதால் இளம்பெண்கள் தங்கள் கணவரிடமும்இ பிள்ளைகளிடமும் அன்பு காட்டி, கட்டுப்பாடும் கற்பும் உள்ளவர்களாய் வீட்டுவேலைகளைச் செவ்வனே செய்பவர்களாய்த் தங்கள் கணவருக்குப் பணிந்திருப்பார்கள். அப்பொழுதுதான் கடவுளுடைய வார்த்தை பழிப்புக்குள்ளாகாது. அவ்வாறே இளைஞரும் கட்டுப்பாடு உள்ளவராய் இருக்க அறிவுரை கூறு. நற்செயல்களைச் செய்வதில் எல்லாவகையிலும் நீயே முன்மாதிரி யாய் இரு. நாணயத்தோடும்இ கண்ணியத்தோடும் கற்றுக்கொடு. யாரும் குற்றம் கண்டுபிடிக்க முடியாத நலந்தரும் வார்த்தைகளைப் பேசு. அப்பொழுது எதிரிகள் நம்மைப்பற்றித் தீயன பேச எதுவுமின்றி வெட்கிப்போவார்கள். ஏனெனில் மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது. நாம் இறைப்பற்றின்மையையும், உலகுசார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்துக் கட்டுப்பாட்டுடனும், நேர்மையுடனும், இறைப்பற்றுடனும் இம்மையில் வாழ இவ்வருளால் பயிற்சி பெறுகிறோம். மகிழ்ச்சியோடு எதிர்நோக்கியிருப்பது நிறைவேறும் எனக் காத்திருக்கிறோம். நம் பெருமைமிக்க கடவுளும்இ மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப்போகிறது. அவர் நம்மை எல்லா நெறிகேடுகளிலிருந்தும் மீட்டு, நற்செயல்களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாகத் தூய்மைப்படுத்தத் தம்மையே ஒப்படைத்தார்.

**பதில்பாடல் :** நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்தே வரும்

## நற்செய்தி : லூக்கா 17 : 7 - 10

அக்காலத்தில் ஆண்டவர் உரைத்தது: ”உங்கள் பணியாளர் உழுதுவிட்டோ மந்தையை மேய்த்துவிட்டோ வயல்வெளியிலிருந்து வரும்போது அவரிடம், ”நீர் உடனே வந்து உணவருந்த அமரும்” என்று உங்களில் எவராவது சொல்வாரா? மாறாக, ”எனக்கு உணவு ஏற்பாடு செய்யும் உம் இடையை வரிந்துகட்டிக்கொண்டு, நான் உண்டு குடிக்கும்வரை எனக்குப் பணிவிடை செய்யும் அதன்பிறகு நீர் உண்டு குடிக்கலாம்” என்று சொல்வாரல்லவா? தாம் பணித்ததைச் செய்ததற்காக அவர் தம் பணியாளருக்கு நன்றி கூறுவாரோ? அது போலவே, நீங்களும் உங்களுக்குப் பணிக்கப்பட்ட யாவற்றையும் செய்தபின், ”நாங்கள் பயனற்ற பணியாளர்கள் எங்கள் கடமையைத்தான் செய்தோம்” எனச் சொல்லுங்கள்” என்றார்.

**தியானம்:** செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தபின் நாங்கள் பயனற்ற ஊழியர்கள் செய்ய வேண்டியதைத்தான் செய்தோம் என்கிறது இன்றைய நற்செய்தி வாசகம் . அதாவது கடமையைச் செய்து விட்டு அதனால் வரும் பலன்கள் மற்றும் விளைவுகளில் அதிகம் கவனம் செலுத்தக்கூடாது என்பது இவற்றின் பொருள். மறைநூல்கள் கடமைக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கின்றன. பலனை எதிர்பார்க்காத ஒரு மன நிலை நம்மில் உருவாக்க முயற்ச்சி எடுக்கின்றன. ஆனால் இன்றைய மனிதர்களோ வித்தியாசமானவர்கள் இவர்கள் சொல்வதெல்லாம் ‘கடமையை செய்யாதே’ பலனை எதிர் பார். அதாவது பலனை எதிர்பார்க்கின்றோம். ஆனால் அதற்கான விலையாகிய கடின உழைப்பை கொடுக்க நாம் தயாராக இல்லை. படிக்கின்ற மாணவன் நல்ல மதிப்பெண் என்ற பலனை எதிர்பார்க்கின்றான். ஆனால் அதற்கான விலையாகிய படிப்பை கொடுக்க தயங்குகிறான். வேலை என்கிற பலனைத்தேடி அலைகின்ற ஓர் இளைஞன் அதற்கான விலையாகிய விடாமுயற்சியை கொடுக்க தயங்குகின்றான். வாழ்க்கையில் முன்னுக்கு வரத்துடிக்கின்ற பல நபர்கள் அதற்கான விலையாகிய கடின உழைப்பைத் தர தயங்குகின்றான். விளைவு? உழைக்காமல் முன்னேறுகின்ற இடைத்தரகர்களின் கூட்டம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டிருக்கின்றது. ஒரு கடமை விருப்பமாக ஆகிவிட்டால் இறுதியில் அதுவே ஒரு நம் சந்தோசமாகி விடும் என்பதை மனதில் கொண்டு நாம் நம்முடைய கடமைகளை சரிவர செய்வோமானால் இறைவன் நம்மை மிகுந்த பலனோடு ஆசீர்வதிப்பார்.